புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

**No.4/TD/TC/PA/2016** புதுச்சேரி, தேதி: 28.12.2016

## செய்திக் குறிப்பு

## போக்குவரத்து சட்ட விதிகளுக்கு மாறாக இயங்கும் ஆட்டோக்கள் மீது நடவடிக்கை

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சுமார் 3000 ஆட்டோக்கள் மோட்டார் வாகனச் சட்டப்படி உரிய ஆவணங்களுடன் தற்போது இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஆட்டோவிலும் கீழ்கண்ட ஆவணங்கள் கண்டிப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

(i) பதிவுச் சான்றிதழ் (R.C.)
(ii) பெர்மிட்.
(iii) தகுதிச் சான்றிதழ் (F.C.)
(iv) காப்பீட்டுச் சான்றிதழ் (Insurance)
(v) புதிய ஆட்டோ கட்டண விகிதப் பட்டியல்.
(vi) ஓட்டுனரின் போக்குவரத்து ஓட்டுனர் உரிமம்.
(vii) மாசுக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ்.
(viii) ஆட்டோ மீட்டர்களை சரிசெய்ததற்கான சான்றிதழ்.

மேற்படி ஆவணங்கள் இல்லாத வாகனங்களை இயங்குவது மோட்டார் வாகனச் சட்ட விதிகளுக்கு முரணானது. அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்களும் உரிய ஆவணமின்றி இயங்கும் வாகனங்களை கண்டறிந்து அவற்றின் மேல் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

புதுச்சேரியில் ஆட்டோக்களுக்கு புதிய கட்டணம் நிர்ணயம் செய்ததைத் தொடர்ந்து ஆட்டோ ஓட்டுனர்கள் ஆட்டோ மீட்டர்களை திருத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறு ஆட்டோ மீட்டர்களை சரிசெய்வதற்கு 15.02.2017 வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. ஆட்டோ மீட்டர்களை திருத்தம் செய்வது வரை தற்போது அமுலுக்கு வந்திருக்கும் புதிய கட்டண விகிதப்பட்டியல் ஒவ்வொரு ஆட்டோவிலும் பயணிகளின் பார்வைக்கு வைத்திருக்கு வேண்டும் என்று அனைத்து ஆட்டோ ஓட்டுனர்களும் முன்னரே அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மீட்டர்களை புதிய கட்டணத்திற்கேற்ப சரிசெய்வதற்காக கொடுத்திருப்பவர்கள் அதற்குறிய ஆவணத்தை (ரிசிப்ட்) ஆய்வுக்கு வரும் போக்குவரத்து அதிகாரிகளிடம் காண்பித்து உரிய விளக்கம் தெரிவிக்கலாம்.

வாகன ஆய்வு செய்யவரும் போக்குவரத்து அலுவலர்களிடம் அனைத்து ஆட்டோ ஓட்டுனரும் உரிய ஆவணங்களை காண்பித்து போக்குவரத்துத் துறையின் பணிகளுக்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்

GOVT OF PONDICHERRY
TRANSPORT DEPARTMENT